B

# முதல் திருப்புதல் தேர்வு – 2024
## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி பொருளியல் மதிப்பெண்கள்:90

பகுதி – I

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20x1=20

1. பேரியல் பொருளாதாரம் என்பது எதைப் பற்றிய படிப்பு.
அ) தனி நபர்கள் ஆ) நிறுவனங்கள் இ) நாடு ஈ) மொத்தங்கள்
2. ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக.
அ) உற்பத்தி மற்றும் பகிர்வும் ஆ) உற்பத்தி மற்றும் பரிமாற்றம்
இ) உற்பத்தி மற்றும் நுகர்வு ஈ) உற்பத்தி மற்றும் சந்தையிடுகை
3. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது மிகப் பெரிய எண்ணாக இருக்கும்?
அ) செலவிடக்கூடிய வருமானம் ஆ) தனிநபர் வருமானம்
இ) NNP ஈ) GNP
4. உற்பத்திப் புள்ளியில் NNP யின் மதிப்பு _______ என அழைக்கப்படுகிறது.
அ) காரணி செலவில் NNP ஆ) சந்தை விலையில் NNP
இ) காரணி செலவில் GNP ஈ) தலைவீத வருமானம்
5. நடப்புக் கூலி விகிதத்தில் வேலை செய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் பணியில் இருந்தால் அது _______ எனப்படும்.
அ) முழு வேலை வாய்ப்பு ஆ) குறைந்தளவு வேலை வாய்ப்பு
இ) வேலை வாய்ப்பின்மை ஈ) வேலைக்கான வாய்ப்பு
6. தொன்மைப் பொருளியல் கோட்பாட்டின் பிரதான இயல்பு _______
அ) குறைந்த அளவு வேலை வாய்ப்பு
ஆ) பொருளாதாரம் எப்போதும் சமநிலையில் இருக்கும்
இ) தேவை அதன் அளிப்பை உருவாக்குகிறது
ஈ) நிறை குறை போட்டி
7. கீன்ஸின் நுகர்வுச் சார்பு C=10+0.8y ஆக இருந்து, செலவிடக்கூடிய வருவாய் ஆக இருந்தால், நுகர்வு எவ்வளவு?
அ) ரூ.0.8 ஆ) ரூ.800 இ) ரூ.810 ஈ) ரூ.0.81
8. குறைவான வட்டி வீதம்
அ) நுகர்வைக் குறைக்கும் ஆ) கடனுக்கான செலவை உயர்த்தும்
இ) சேமிப்பை ஊக்குவிக்கும் ஈ) கடனையும் செலவையும் அதிகரிக்கும்
9. _______ என்பது பணவீக்க விகிதம் குறைந்த செல்வது ஆகும்.
அ) எதிர் பணவீக்கம் ஆ) பணவாட்டம் இ) தேக்க வீக்கம் ஈ) மந்தம்
10. தேக்க வீக்கத்தில் பணவீக்க விகிதத்துடன் இணைந்திருப்பது.
அ) தேக்கம் ஆ) வேலைவாய்ப்பு இ) உற்பத்தி ஈ) விலை

www.Padasalai.Net www.TrbTnpsc.com



11. ரெப்போவிகிதம் என்பதன் பொருள் ?
அ) வணிக வங்கிகள் RBI க்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
ஆ) RBI வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
இ) அந்நிய செலாவணி விகிதம்
ஈ) நாட்டின் வளர்ச்சி விகிதம்

12. ஏற்றுமதி – இறக்குமதி வங்கி துவங்கப்பட்டது ?
அ) ஜீன் 1982 ஆ) ஏப்ரல் 1982 இ) மே 1982 ஈ) மார்ச் 1982

13. கீழ்க்கண்டவைகளில் எவை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான உதாரணமாக கூற முடியாது ?
அ) வெளிநாட்டில் தன்னூர்தி ஆலை அமைத்தல்
ஆ) வெளிநாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இரும்பு உருக்கு ஆலையை வாங்குதல்
இ) வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு (அ) கடன் பத்திரத்தை வாங்குவது
ஈ) தனி உரிமையுடன் ஒரு புதிய நிறுவனத்தை வெளிநாட்டில் தொடங்குவது

14. காப்புரிமை, பதிப்புரிமை, வாணிக ரகசியம் போன்றவை _______ உடன் தொடர்புடையவை.
அ) வணிகம் சார் சொத்துரிமை ஆ) வணிகம் சார்ந்த முதலீட்டு வழிமுறைகள்
இ) காட்ஸ் ஈ) NAMA

15. அரசின் வருவாய் வரவு (Revenue Receipts) கணக்கில் சேராதது
அ) வட்டி ஆ) இலாபம் மற்றும் இலாப ஈவு
இ) கடன்களைத் திரும்பப் பெறுதல் ஈ) சொத்திலிருந்து கிடைக்கிற வாரம்

16. வன அழிவிற்கான முதன்மை காரணம் யாது ?
அ) மரம் வெட்டும் தொழில் ஆ) இயற்கை வன அழிவு
இ) நிலத்தை சமப்படுத்துதல் ஈ) தட்பவெட்பநிலை சமப்படுத்துதல்

17. மின்னணு கழிவுகள் _______ என்று பொதுவாக குறிப்பிடப்படுகின்றன.
அ) திடக்கழிவுகள் ஆ) குப்பைக் கழிவுகள்
இ) இ–கழிவுகள் ஈ) மருத்துவமனைக் கழிவுகள்

18. இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு _______
அ) 1950 ஆ) 1951 இ) 1947 ஈ) 1948

19. கேள்வித்தாள் மூலம் புள்ளிவிவரம் திரட்டப்பட்டால் அது _______
அ) முதல் நிலை விவரம் ஆ) இரண்டாம் நிலை விவரம்
இ) வெளியிட்ப் பெற்ற விவரம் ஈ) தொகுக்கப்பட்ட விவரம்

20. U என்பது _______
அ) விலகல் ஆ) திட்டப்பிழை இ) பிழைக் கருத்து ஈ) மேற்சொன்ன எதுவும் அல்ல

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி – II

7x2=14

II எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30–க்கு கட்டாயம் விடையளிக்கவும்.

21. தனி நபர் வருமானம் என்றால் என்ன ?
22. ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது ?
23. 'முடுக்கி' வரையறு.
24. வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறுக.
25. வாணிப வீதத்தினை விளக்குக.
26. GST யின் கூறுகள் யாவை ?
27. சுற்றுச்சூழல் என்பதன் பொருள் கூறுக.
28. "நிதி அயோக்" பற்றி குறிப்பு வரைக.
29. உய்த்துணர்வு புள்ளியியல் என்றால் என்ன ?
30. தேக்க வீக்கம் என்றால் என்ன ?

## பகுதி – III

III எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40–க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7x3=21

31. முதலாளித்துவம் மற்றும் சமத்துவத்தை வேறுபடுத்துக.
32. தேசிய வருவாயின் பயன்களைப் பட்டியலிடுக.
33. கீழ்க்காணுபவற்றை சுருக்கமாக விவரி ?
    அ) பருவகால வேலையின்மை
    ஆ) உடன்பாடில்லா வேலையின்மை
    இ) படித்தவர் வேலையின்மை
34. நுகர்வு சார்பைப் பாதிக்கின்ற ஏதேனும் மூன்று அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக.
35. பணவீக்கத்தின் வகைகள் பற்றி எழுதுக.
36. ஐஎம்எப் (IMF) ன் கடன் வழங்கும் திட்டங்களில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.
37. குறிப்பு வரைக:
    அ) பருவநிலை மாற்றம் ஆ) அமில மழை
38. "நிதி அயோக்" பணிகள் யாவை ?
39. பொருளாதார அளவையியலின் நோக்கங்களை கூறுக.
40. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பிரிவு – IV

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35

41. அ) முதலாளித்துவம், சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை விளக்குக.

(அல்லது)

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி பணிகளை விவரி.

42. அ) தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை?

(அல்லது)

ஆ) குறிப்பு எழுதுக. அ) சார்க் ஆ) பிரிக்ஸ்

43. அ) வேலையின்மைகளின் வகைகள் யாவை?

(அல்லது)

ஆ) பொது நிதியின் எல்லைகளை விளக்குக.

44. அ) நுகர்வு சார்பின் அக மற்றும் புறக்காரணிகளை விளக்குக.

(அல்லது)

ஆ) மொத்த தேசிய உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் தரத்துக்கும் இடையேயான தொடர்பினை விளக்குக.

45. அ) பணத்தின் பணிகளை விளக்குக.

(அல்லது)

ஆ) பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதி.

46. அ) நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.

(அல்லது)

ஆ) நிதிக் கொள்கைகளின் கருவிகள் எவை? விளக்குக.

47. அ) உள்நாட்டு வாணிகத்துக்கும், பன்னாட்டு வாணிகத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும்.

(அல்லது)

ஆ) பொருளாதாரத்தில் பொருளாதார அளவையியலின் பயன்களை விவரி.

***/***

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

12

# வேலூர் மாவட்டம்
# முதல் திருப்புதல் தேர்வு - 2024
# பொருளியல்

*Prepared by*
**C. SUDHAKAR GBHSS ussoor**
**K. SUDHAKAR GHSS Panamadangi**

## பகுதி - I

**I.** ***சரியான விடையைத் தேர்ந்தேடுத்து எழுதுக***

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஈ.) | மொத்தங்கள் | 11 | ஆ) | RBI வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம். |
| 2 | இ.) | உற்பத்தி மற்றும் நுகர்வு | 12 | ஈ.) | மார்ச் 1982 |
| 3 | ஈ.) | GNP | 13 | இ.) | வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு (அ) கடன் பத்திரத்தை வாங்குவது |
| 4 | அ.) | காரணி செலவில் NNP | 14 | அ.) | வணிகம் சார் சொத்துரிமை |
| 5 | அ.) | அ.) முழு வேலைவாய்ப்பு | 15 | ஈ.) | சொத்திலிருந்து கிடைக்கிற வாரம் |
| 6 | ஆ.) | பொருளாதாரம் எப்போதும் சமநிலையில் இருக்கும் | 16 | அ.) | மரம் வெட்டும் தொழில் |
| 7 | இ.) | ₹ 810 | 17 | இ.) | இ-கழிவுகள் |
| 8 | ஈ.) | கடனையும் செலவையும் அதிகரிக்கும் | 18 | அ.) | 1950 |
| 9 | அ.) | எதிர்பண வீக்கம் | 19 | அ.) | முதல் நிலை விவரம் |
| 10 | அ.) | தேக்கம் | 20 | இ.) | பிழைக் கருத்து |

## பகுதி - II

21. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கும் மொத்த வருமானம் ஆகும்.

22. 1. பருவ கால வேலையின்மை நிலவுகிறது.
2. மறைமுக வேலையின்மை நிலவுகிறது.

23. தூண்டப்பெற்ற முதலீட்டிற்கும் தொடக்கத்தில் நுகர்வு செலவில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையே உள்ள விகிதம் முடுக்கி எனப்படும்.

**முடுக்கி $\beta = \Delta I/\Delta C$**

24. மைய வங்கி பொதுச்சந்தையில் அரசின் கடன் பத்திரங்களை விற்பதும், திரும்ப வாங்குவதும் வெளிச்சந்தை நடவடிக்கை எனப்படுகிறது.

25. ஏற்றுமதி பொருளின் விலைக்கும் இறக்குமதி பொருளின் விலைக்கும் இடையேயான விகிதமே வாணிப வீதம் எனலாம்.

26. CGST – மத்திய சரக்கு மற்றும் சேவை வரி - **மத்திய அரசு வசூலிக்கும்**
SGST - மாநில சரக்கு மற்றும் சேவை வரி - **மாநில அரசு வசூலிக்கும்**
IGST - ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி - **மத்திய அரசு வசூலிக்கும்**

27. நம்மைச் சுற்றியுள்ள காற்று, நீர், நிலம், இயற்கை வளங்கள் தாவரங்கள் மற்றும் அனைத்து உயிரினங்கள் அடங்கிய தொகுப்பு மற்றும் அத்தொகுப்பில் உள்ளவைகளுக்கு இடையேயான பரஸ்பர உறவு பற்றியது.

28. 1. நிதி ஆயோக் என்பது இந்தியாவை உருமாற்றம் செய்வதற்கான தேசிய நிறுவனம்.
2. இந்திய அரசு இதனைத் திட்ட குழுவிற்கு பதிலாக ஜனவரி 1 2015 இல் அமைக்கப்பட்டது.
3. இதன் தலைவர் இந்திய பிரதமர் ஆவார்.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

29. கூறுவின் விவரங்களை பகுப்பாய்வு செய்து அதன் பண்பின் முழு தொகுப்பின் விவரங்களை அறிந்து கொள்வதாகும் அல்லது உய்த்துணர்வதற்கு பயன்படும் புள்ளியியலின் ஒரு பகுதி உய்த்துணர்வு புள்ளியல் எனப்படும்.

30. பொருளாதார வளர்ச்சியில் தேக்க நிலையும் (வேலையின்மையும்) அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை ஆகும்.

## பகுதி - III

31. ***முதலாளித்துவம்***
1. வளங்கள் அனைத்தும் தனியார் வசம் இருக்கும்
2. இலாப நோக்கம்
3. தந்தை ஆடம் ஸ்மித்

***சமத்துவம்***
1. வளங்கள் அனைத்தும் அரசுக்கு சொந்தமானது
2. சமூக நலன்
3. சமத்துவத்தின் தந்தை காரல் மார்க்ஸ்

32. 1. ஒரு நாட்டின் பொருளாதார செயல்திறனை நாட்டு வருவாய் விளக்குகிறது.
2. மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்துள்ளதா என்பதை கண்டறிய தேசிய வருவாய் உதவுகிறது.
3. ஒரு நாட்டின் வளர்ச்சியின் அளவை கணக்கிட நாட்டு வருவாய் பயன்படுத்தப்படுகிறது.

33. ***அ. பருவ கால வேலையின்மை.***
ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மைக்கு பருவ கால வேலையின்மை என்று பெயர். ***எ.கா. வேளாண்மை.***

***ஆ. உடன்பாடில்லா வேலையின்மை.***
உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை நிலவுகிறது.

***3. படித்தவர் வேலையின்மை***
சில நேரங்களில் படித்தவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருப்பது.

34.

| ***அகக் காரணிகள்*** | ***புறக்காரணிகள்*** |
|---|---|
| i) முன்னெச்சரிக்கை நோக்கம் | i) வருமான பகிர்வு |
| ii) எதிர்பார்க்கும் நோக்கம் | ii) விலை அளவு |
| iii) ஊகவாணிப நோக்கம் | iii) கூலி அளவு iv) வட்டி வீதம் |

35. 1. தவழும் பணவீக்கம்
2. நடக்கும் பணவீக்கம்
3. ஓடும் பணவீக்கம்
4. தாவும் பணவீக்கம்
5. தேவை இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கம்
6. காகித பணவீக்கம்
7. கடன் பணவீக்கம்

36. ***1. அடிப்படை கடன் வசதி:*** உறுப்பு நாடுகள் தற்காலிக அயல்நாட்டு செலுத்து நிலை சமமின்மை பிரச்சனையில் விடுபட இந்த வகை கடன் வசதி.

***2. விரிவாக்கப்பட்ட நிதி வசதி:*** அடிப்படை கடன் தொகைக்கு மேல் அதிகமாக கடன் பெற அனுமதிப்பதே இந்த வகை கடன் வசதி.

***3. தாங்கி இருப்பு வசதி:*** தாங்கிருப்பு நிதி வசதி 1969-ல் துவங்கப்பட்டது. உணவுப் பொருள் விலை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் வழங்கப்படும் கடன் வசதி.

37. ***பருவநிலை மாற்றம்***
வெப்பநிலை மழைப்பொழிவு காற்று வீசுதல் ஆகியவற்றின் அளவுகளிலும் அவைகள் நிலவும் காலங்களிலும் ஏற்படும் மாற்றம் பருவநிலை மாற்றம் ஆகும்.

www.Padasalai.Net

***அமில மழை***
*சல்பர்டை ஆக்சைடு நைட்ரஜன் ஆக்சைடு வளிமண்டலத்தில் நீருடன் வினைபுரிந்து பூமிக்கு மழை மற்றும் பனிப்பொழிவாக பூமிக்கு திரும்புவதை குறிப்பது.*

38. 1. *கூட்டுறவு மற்றும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சி*
2. *நாட்டின் நிகழ்வுகளில் மாநிலங்களை பங்கெடுக்க வைத்தல்*
3. *பரவலாக்க திட்டமிடல்*
4. *உகந்த தாக்குதல்*
5. *சச்சரவு தீர்த்தல்*
6. *திறன் உருவாக்குதல்*

39. 1. *பொருளாதார நடவடிக்கைகளை முன் கணிப்பு செய்ய உதவுகிறது.*
2. *மாறிகளுக்கிடையேயுள்ள உறவுகளை மீண்டும் நிரூபிப்பதற்கு உதவுகிறது.*
3. *எடுகோள்களை சோதனை செய்ய பண்புகளை மதிப்பீடு செய்யவும் உதவுகிறது.*
4. *புதிய கோட்பாடுகளையும் புதிய உறவுகளையும் நிறுவுவதற்கு உதவுகின்றது.*

40. 1. *விற்பனையை விரிவுபடுத்துதல்*
2. *இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்*
3. *வாணிகப் பரவலாக்கம்*
4. *போட்டி இடர்களை குறைத்தல்*

## பகுதி - IV

**41. அ.)**

| வ. எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|---|
| 1 | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை |
| 2 | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |
| 3 | மைய பிரச்சினைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்ட முறை | மத்திய திட்டமுறை மற்றும் தடையில்லா சந்தை |
| 4 | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| 5 | வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை | குறைந்த சமநிலையற்ற நிலை |
| 6 | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாடுடன் சுதந்திரம் |
| 7 | முக்கிய பிரச்சினை | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை |

**41. ஆ.)**

**1. *பண அதிகார அமைப்பு* :** *வங்கி அமைப்பை நிலைப்படுத்துகிறது.*
**2. *காகிதப் பண வெளியீடு* :** *இது காகித பணத்தை அச்சிட்டு வெளியிடும் உரிமை பெற்றது.*
**3. *அரசுக்கான வங்கி* :** *இது மத்திய மாநில அரசுகளுக்கான வங்கியாகும்.*
**4. *வங்கிகளின் வங்கி* :** *அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கியாகும்.*
**5. *கடன் வழங்குவதில் கடைசி புகலிடம்* :** *வணிக வங்கிகளுக்கு நிதிச்சிக்கல்கள் ஏற்படும் பொழுது கடனை வழங்கி உதவுகிறது.*
**6. *அந்நியச் செலாவணியின் பாதுகாவலர்* :** *வெளிநாட்டு பண இருப்புகளை பாதுகாக்கும் பணியினை செய்கிறது.*
7. *பணவியல் மற்றும் இதர தகவல்களை வெளியிடுகிறது.*

www.Padasalai.Net

**42. அ.)**

**1. மா ற்றுச் செலுத்துதல்கள் :** ஓய்வூதியம், வேலையின்மைக்கான உதவித்தொகை, மானியங்கள் போன்றவை அரசின் செலவுகள் ஆகும். இச்செலவுகள் நாட்டு வருமான கணக்கீட்டில் சேர்க்கப்படுவதில்லை.

**2. தேய்மானங்களை மதிப்பிடுவதில் சிக்கல் :** தேய்மானத்தை தேசிய வருமானத்திலிருந்து கழிப்பது என்பது மிக எளிதானது அல்ல மிகக் கவனத்துடன் சரியாக மதிப்பீடு செய்து கழிக்க வேண்டும்.

**3. பணம் செலுத்தப்படாத சேவைகள் :** இந்தியாவில் அதிகமான பெண்கள் வீட்டிலேயே வேலை செய்கின்றனர். இப்பெண்களின் மதிப்புமிக்க பணிகள் தேசிய உற்பத்தியில் சேர்க்கப்படுவதில்லை.

**4. சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள் மூலம் பெரும் வருமானம் :** சூதாட்டம், கடத்தல் போன்ற சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகள் மூலம் பெறும் வருமானம் நாட்டு வருமானக் கணக்கீட்டில் சேர்க்கப்படுவதில்லை.

**5. சுய நுகர்விற்காக உற்பத்தி :** விவசாயிகள் தங்களின் சுயநலத்திற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர். விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

**6. இருமுறை கணக்கீட்டு பிரச்சனை :** இதனைத் தவிர்க்க இறுதி பொருட்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக்கூட்டலையோ கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**7. மூலதன இலாபம் :** மூலதன இலாபம் நாட்டு வருமானக் கணக்கீட்டில் சேர்க்கப்படுவதில்லை.

**42. ஆ.)**

**அ.) சார்க் (SAARC)**

1. தெற்காசிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்புக்காக துவங்கப்பட்ட அமைப்பு சார்க் ஆகும்.

2. டிசம்பர் 8, 1985-ல் அமைக்கப்பட்டது. ஜனவரி 16, 1987-ல் நேபாள தலைநகர் காத்மாண்டுவை தலைமைச் செயலகமாகக் கொண்டு செயல்படத் துவங்கியது.

3. வங்காளதேசம், பூட்டா ன், இந்தியா , மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய 7 நாடு உறுப்பு நாடுகளாகும்.

**ஆ.) பிரிக்ஸ் ( BRICS )**

1. வேகமாக வளர்ந்து வரும் 5 நாடுகளின் முதல் எழுத்துக்களின் சுருக்கப் பெயர் பிரிக்ஸ் (BRICS).

(a.) பிரேசில் (b.) ரஷ்யா (c.) இந்தியா (d.) சீனா (e.) தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள்.

2. சீனாவின் ஷாங்காய் நகரில் பிரிக்ஸ்-ன் தலைமை அலுவலகம் செயல்படுகிறது.

3. வணிக ஒத்துழைப்பை மேம்படுத்துதல் வளரும் நாடுகளைக்கென தனியான பன்னாட்டு அமைப்பை உருவாக்குவது. பிரிக்ஸ் மேம்பா ட்டு வங்கி தொ டங்கப்பட்டது. வளரும் நாடுகளில் அமைதி மற்றும் பாதுகாப்பு இதன் முக்கிய செயல்பாடாகும்.

**43. அ.)**

**1. வாணிபச் சூழல் வேலையின்மை:** இது போதுமான அளவு விளைவுத் தேவை இல்லாதபோது நிகழ்வதாகும்.

**2. பருவகால வேலையின்மை:** ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும்.

**3. உடன்பாடில்லா வேலையின்மை:** உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் ஏற்படுகிறது.

**4. படித்தவர் வேலையின்மை:** சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை.

**5. மறைமுக வேலையின்மை:** உழைப்பாளர்களின் இறுதிநிலை உற்பத்தித் திறன் பூஜியம் ஆகும்.

**43. ஆ.)**

**1. பொது வருவாய்:** அரசின் வரி மற்றும் வரி இல்லா வருமானங்கள் பற்றியது.

**2. பொதுச் செலவு:** அரசின் செலவு பொதுச் செலவின் விளைவுகள் மற்றும் பொது செலவை கட்டுப்படுத்துதல் பற்றியது.

**3. பொதுக் கடன்:** அரசு கடன் மூலமாக பொ துமக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது

**4. நிதி நிர்வாகம்:** அரசின் வரவு செலவு திட்டத்தின் பல்வேறு பகுதிகளைப் பற்றியது.

**5. நிதிக் கொள்கை:** வரிகள், மானியங்கள், பொ துக் கடன் மற்றும் பொதுச் செலவு ஆகியவைகள் நிதிக்கொள்கையின் கருவிகளாகும்.

**44. அ.)**

***அகக் காரணிகள் :***

**1. *முன்னெச்சரிக்கை நோக்கம்:*** எதிர்பாராமல் ஏற்படும் செலவுகளை சந்திப்பதற்காக கையில் ரொக்கமாக வைத்திருப்பது.

**2. *எதிர்பா ர்க்கும் நோக்கம்:*** எதிர்காலத் தேவைக்கான விருப்பம்.

**3. *கணிக்கும் நோக்கம்:*** மற்றவரின் விருப்பம் மற்றும் பாராட்டை பெறுதல்.

**4. *முன்னேறும் நோக்கம்:*** வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற விரும்புதல்.

**5. *வாணிப நோக்கம்:*** வியாபாரத்தை வளரச் செய்ய விரும்புதல்.

***புறக்காரணிகள் :***

**1. *வருமான பகிர்வு:*** ஏழைகளுக்கு வருமானம் அதிகரித்தால் நுகர்வு அதிகரிக்கும்.

**2. *விலை அளவு:*** நாட்டில் விலைவாசி குறைந்தால் நுகர்வு அதிகரிக்கும்.


**3. *கூலி அளவு:*** கூலி உயர்ந்தால் நுகர்வு அதிகரிக்கும்.


**4. *வட்டி விகிதம்:*** வங்கிகள் சேமிப்பிற்கான வட்டி வீதத்தை குறைத்தால் நுகர்வு அதிகரிக்கும்.

**5. *நிதிக்கொள்கை:*** அரசு வரிவிதிப்பை குறைக்கும் போது நுகர்வு அதிகரிக்கும்.

**6. *நுகர்வுக் கடன்:*** கடன் வசதி நுகர்வை அதிகரிக்கும்.

**44. ஆ.)**




**45. அ.)**

1. பணம் ஒரு பரிவர்தனை கருவி.
2. பணம் ஒரு மதிப்பின் அளவுகோல்.
3. பணம் ஒரு மதிப்பின் நிலைக்கலன்.
4. பணம் வருங்கால செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை.
5. கடன் முறைக்கு அடிப்படை.
6. தேசிய வருவாயை பகிர்ந்தளிக்க உதவுகிறது.
7. இறுதிநிலை பயன்பாடுகளை ஒப்பிட பணம் பயன்படுகிறது.
8. திரும்ப செலுத்தும் திறனை தக்க வைக்க பணம் உதவுகிறது.
9. பணம் வாங்கும் திறனை குறிக்கிறது.

**45. ஆ.)**

**1. *இயற்கை வளங்கள்:*** ஒரு நாட்டின் இயற்கை வளங்கள் பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும்.

**2. *மூலதன உருவாக்கம்:*** மூலதனம் பொருளாதாரத்தின் அனைத்து செயல்பாட்டிற்கும் அடிப்படையாகும்.

**3. *சந்தை அளவு:*** நாட்டின் பெரிய அளவிலான சந்தை கூடுதல் உற்பத்தியைத் தூண்டி பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுகிறது.

**4. *பன்னாட்டு வாணிகம்:*** பன்னாட்டு வாணிகத்தின் சாதகமான நிலை பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

**5. *பொருளாதார அமைப்பு முறை:*** ஒரு நாட்டின் தடையில்லா பொருளாதார கொள்கையினால் வேகமான வளர்ச்சியை பெற முடிகிறது.

**6. *கட்டமைப்பு மாற்றம்:*** அனைத்து துறைகளுக்கான கட்டமைப்பு மாற்றம் பொருளாதார முன்னேற்றத்தை தூண்டும்.

**7. *நிதியியல் முறை:*** நாட்டின் ஒழுங்குபடுத்தப்பட்ட வங்கியியல், மூலதன ஆக்கத்தை ஏற்படுத்தி பொருளாதார முன்னேற்றத்தை அடைய செய்யும்.

www.Padasalai.Net

**46. அ.)**

**1. மூலதனத் திரட்சி :** வங்கிகள் சேமிப்புகளை திரட்டி அதை முதலீட்டிற்கு கொண்டுவந்து உற்பத்தியை அதிகரிக்க உதவுகின்றன.

**2. கடன் உருவாக்கம் :** வங்கிகளின் கடன் உருவாக்கம் மூலம் உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருமானம் ஆகியவை அதிகரித்து பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது.

**3. அரசுக்கு நிதி வழங்குகிறது :** தொழில் வளர்ச்சியை மேம்படுத்த அரசுக்கு தேவைப்படும் நீண்ட கால மற்றும் குறுகிய கால கடன்களை வழங்குகிறது.

**4. வேலைவாய்ப்பினை உருவாக்குதல் :** வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டு வேலைவாய்ப்புகள் உருவாகிறது.

**46. ஆ.)**

**1. வரி விதித்தல்:** வரிகள் மக்களிடமிருந்து வருமானத்தை அரசிற்கு மாற்றுகிறது. இது நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கும்.

**2. பொதுச் செலவு:** பொதுச் செலவு பணியாளர்களின் கூலி மற்றும் சம்பளங்களை அதிகரிக்கும்போது பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான மொத்த தேவை உயருகிறது.

**3. பொதுக்கடன்:** அரசு, கடன் மூலமாக பொதுமக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது.

**47. அ.)**

| உள்நாட்டு வாணிபம் | பன்னாட்டு வாணிபம் |
|---|---|
| 1. ஒரு நாட்டிற்குள் நடைபெறும் வாணிபம். | 1. பல நாடுகளுக்கு இடையே நடைபெறும் வாணிகம் |
| 2. பொருட்கள் மற்றும் பணிகள் இடம்பெயர்தல் தடை ஏதுமில்லை | 2. சுங்கவரி மற்றும் பங்களவு போன்ற தடைகள் உண்டு |
| 3.ஒரேஒரு பணம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது | 3. பல நாட்டு பணங்கள் பயன்படுத்தப்படுகிறது |
| 4. புவி அமைப்பு மற்றும் காலநிலை ஒரே மாதிரி இருக்கும் | 4. புவி அமைப்பு மற்றும் காலநிலை வேறுபடும் |
| 5. உழைப்பு மற்றும் மூலதனம் தடையில்லாமல் இடம்பெயரும். | 5. உழைப்பு, மூலதனம் இடம்பெயர தடை |

**47. ஆ.)**

1. பொருளாதார நடவடிக்கைகளை முன் கணித்தல் மூலமாக அறிந்து கொள்ள உதவுகிறது.
2. மாறிகளுக்கு இடையே உள்ள உறவுகளை நிரூபிப்பதற்கு உதவுகிறது.
3. பொருளாதாரத்தில் புதிய கோட்பாடுகளையும், புதிய உறவுகளையும் நிறுவுவதற்கு உதவுகிறது.
4. எடுகோள்கள்களை சோதனை செய்யவும் பண்புகளை மதிப்பீடு செய்யவும் உதவுகிறது.
5. புள்ளி விவரங்களை திரட்டுவதற்கும் பொருளாதார அளவையியல் மாதிரியை உருவாக்குவதற்கும் பயன்படுகிறது.

www.Padasalai.Net